Nallur Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 25 ஜூலகஃ 1 இதழ் 148
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-7-1986

## மாகாண சபைகள் மூலமான
# அதிகாரப் பரவலாக்கல் ஒரு சிறந்த நிர்வாகமுறை”
### அரசபாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜே. ஆர்.

[கொழும்பு]

''மாகாண சபைகள் மூலமான அதிகாரப்பலவலாக்கலானது இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒருவழிமுறை மட்டுமல்ல. திறமையன ஒரு நிர்வாக முறையுமாகும்'' என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன கூறியுள்ளார்.

இனப்பிரசனைத் தீர்வு குறித்து அரசு தரப்பில் கொண்டுவரப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கல் பற்றிய புதிய யோசனைகள் நேற்றைய அரசாங்க பாராளுமன்ற குழுக்கூட்டத்தின்போது ஆராயப்பட்டது. அங்கு கருத்து வெளியிடுகையிலேயே ஜனாதிபதி இதனைத்தெரிவித்தார்.

மாகாண சபைகளின் பொது

(5ம் பக்கம் பார்க்க)

## ● பரந்தனில் ஹெலிகாப்டரிலிருந்து சூடு
# டச்சுப் பாதிரியார் ஓம்லோ மயிரிழையில் உயிர்தப்பினர்!

## உதவியாளர்பலத்தகாயம்; ஜீப்வண்டிசேதம்

யாழ்ப்பாணம், புதன்

டச்சுக்காரரான பரந்தன் பங்குத்தந்தை வண. ஓம்லோ அடிகளார் ஹெலிகாப்டர் சூட்டுச்சம்பவமொன்றில் நேற்றுமயிரிழையில் உயர்தப்பினர். இவரது உதவியாளரான இளைஞர் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார். இவர்கள் பயணஞ் செய்த ஜீப்வண்டி ‘ஹெலி’யினால் துரத்திச் சுடப்பட்டு சேதத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று நண்பகல் பதினொரு மணியளவில் பரந்தன் சந்திக்கு கால்மைல் தொலைவில் இச்சூட்டுச் சம்பவம் இடம் பெற்றது.

வண.ஓம்லோ தமது உதவியாளருடன் ஊமரபுரத்திலிருந்து தமது ஜீப்வண்டியில் பரந்தன் திரும்பிக் கொண்டிருந்தபோதே இராணுவ ஹெலிகாப்டர் ஒன்று அந்தஜீப் வண்டியை துரத்திச் சுடட தாகத் தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் பங்குத்தந்தையும் சென்அந்தோனியர் தேவாலய மதகுருவுமான டச்சு இனத்தைச் சேர்ந்த வண ஓம்லோ அடிகள் இச்சம்பவத்தின் போது மயிரிழையில உயிர்தப்பினர். பிரான்ஸிஸ் சேவியர் (வயது 24) என்ற இவரது

(8ம் பக்கம் பார்க்க)

## தலவாக்கொல்லையில்
# காடையர் கோஷ்டியினுல் தமிழ் ஆசிரியை பாதிப்பு

ஹற்றன், செவ்

தலவாக்கொல்லை ஆசிரிய பயிர்சிக் கலாசாலையில் பயிற்சி பெறும் இளம் தமிழ் ஆசிரியை ஒருவர் காடையர் கோஷ்டியினால் கடத்தப்பட்டு மானபங்கப் படுத்தப்பட்டுள்ள தாகத் தெரியவந்துள்ளது.

கலாசாலையிலிருந்து தமது சொந்த இடமான பூண்டுலோயாவுக்குப் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த பொழுது காடையர் கோஷ்டி ஒன்று பஸ்ஸுடன் அவ்விளம் ஆசிரியையை கடத்தி ‘சீன் கம’ என்னுமிடத்துக்குக் கொண்டுசென்று மானபங்கப் படுத்தியதாக கூறப்பட்டது.

அவ்விளம் ஆசிரியை மயக்க நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக் குட்படுத்தப்பட்டுள்ளார். அவரது தலைமயிர்கூட கத்தரிக்கப் பட்டிருந்ததாம். [மா]

## மட்டு. வவுணதீவு தேடுதல்
# 10 பேர் பலி

மட்டக்களப்பு புதன்,

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவில் ஆயுதப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது 10 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் மாலை இப்பகுதியில் தேடுதல் வேட்டைக்கு சென்ற அதிரடிப் படையினருக்கும் போராளிகளுக்குமிடையே பிற்பகல் 5 மணி தொடக்கம் 8.30 வரை சுமார் 4 மணித்தியாளங்களாக நேரடிச்சமர் இடம் பெற்றது தெரிந்ததே.

300 க்கும் அதிகமான அதிரடிப் படையினர் இத்தேடுதல் நட வடிக்கையிலீடுபட்டிருந்தனர். இவர்களுக்கு உதவியாக ஹெலிகாப்டரிலிருந்து எரிலைட்டுகள் வீசப்பட்டு, அவ்வெளிச்சத்தின்மூலம் ஷெல். மோட்டர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மணல்பிட்டி என்னுமிடத்தில் பல பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டதாகவும் இவர்களின் சடலங்களும் முகாமுக்குக்

(பட் பக்கம் பார்க்க)

## “மாகாண சபைகளில்
# ஜனாதிபதி தலையீடு நீக்கப்படவேண்டும்!”

## சென்னையில் தொண்டா கருத்து

சென்னை, செவ்

''உத்தேச மாகாணசபைகள் சட்டத்தில். மாகாண சபைகளை ஜனாதிபதி நெறிப் படுத்தலாம் என்ற அம்சம் அம்மாகாணசபைகளின்நிர்வாகத்தில் தேவையற்ற தலையீட்டை உருவாக்குகின்றது. இதனால் இந்த அம்சம் நீக்கப் படவேண்டும்.''

இவ்வாறு கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. ஸ். தொண்டமான் சென்னையில் பத்திரிகையாளர்டையே கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினையைத்தீர்ப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது சொந்த ஆலோசனையைத் தயாரித்துள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் மீண்டுமொரு யுத்தநிறுத்த உடன்படிக்கை பற்றி புதிய யோசனைகள் தொடர்பாக சம்பந்தப் பட்ட வர்களிடையே! ஒரு உடன்பாடு காணப்படின் அடுத்த நடவடிக்கையாக யுத்த நிறுத்த உடன்படிக்கை பற்றியே ஆலோசிக்க வேண்டும் என்றார்.

அத்துடன் மாகாணங்களுக்கிடையிலான இணைப்புச்சபையொன்று ஸ்தாபிக்கப்படவழிவகைகள் செய்யப்பட வேண்டுமெனவும், இச்சபையின் அமைப்பும் கடமைகளும் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்எனவும் ஆலோசனை கூறினார்.

தமிழ்ப் போராளிகள் இலங்கை அரசின் இப்புதியயோசனைகள் திருப்தியற்றவை எனக் கருதினால் அதற்குக் காரணம் அவர்கள் இந்தயோசனைகளை முழுமையாக ஆராயவில்லை எனறே இலங்கை அரசுகருதுவதாக கூறிய அமைச்சர் இதனாலேயே இத்தகைய கருத்து முரண்பாடுகளை நீக்க இந்திய அரசின் உதவிகள் இருதரப்பினருக்கும் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

[ய-செ]

## பாலைதீவில் படகு விபத்து
# 13 பேர் உயிர்தப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

பாலைதீவுக்கடலில் நேற்று முன்தினம் படகுவிபத்தொன்றிலிருந்து பதின்மூன்று பேர் தெய்வாதீன முறையில் காப்பாற்றப்பட்டுள்ளார்கள். இருபதுபேர் பயணம்செய்த இப்படகில் எஞ்சிய ஏழுபேரைப் பற்றிய விபரம் எதுவும்தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

## படகு விபத்தில்
# 7 ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகள் மரணம்!

யாழ்ப்பாணம்,புதன்

ஸ்ரீலங்கா படைகளின் முகாம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்துவதற்காக நமது மக்கள் விடுதலைப் படைவீரர்கள் சென்ற இயந்திரப்படகு கடலில் விபத்துக்குள்ளானதில் ஏழுபேர் உயிரிழந்துள்ளதாக ‘ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி’ (ஈ பி. ஆர். எல். எவ்) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று முன்தினம் நடைபெற்ற இவ்விபத்தில் மக்கள் விடுதலைப்படையின் முக்கிய உறுப்பினர்களான கிருபானந்தன் (இமாம்) சாவகச்சேரி, ஈஸ்வரன் (எட்வேட்) கோப்பாய், (சர்வதேச பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர், மோகனராஜ் (அசோக்) இளவாலை, விமலேந்திரன் (நாகராசா) திருகோணமலை, கண்ணன் (சுகிர்தன்) கல்வியங்காடு, ஞானசேகரன் மட்டக்களப்பு (சர்வதேச பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர்), அகிலன் (செண்பகன்) உரும்பராய் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்,

இச்சம்பவத்தில் எமது தோழர்களுடன் இணைந்து

(5ம் பக்கம் பார்க்க)

# ஓமந்தையில் ரோந்துப்படை-போராளிகள் மோதல்

வவனியா, புதன்

வவனியா இராணுவ முகாமிலிருந்து ஓமந்தை நோக்கி ரோந்துசென்ற இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்குதல் மேற்கொண்டதை தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் பரஸ்பரம் துப்பாக்கிச்சமர் இடம்பெற்றது.

நேற்றுச்காலை யாழ்-கண்டி வீதி 117-வது மைலில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இந்தநேரடிச் சமரின்போது இருதரப்பிலும் எதுவித சேதமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

ரோந்துசென்ற இராணுவத்தினர் மீண்டும் வவனியா முகாம் நோக்கி திரும்பிவிட்டனர். [மா]

# உரம் ஏற்றிவந்த லொறிகடத்தல்

வவனியா புதன்,

மதவாச்சியிலிருந்து வவனியாவுக்கு உரம் ஏற்றிவந்த லொறி ஒன்று நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

சிங்களவர் ஒருவருக்கு இந்த லொறி சொந்தமானது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காரைநகர் மல்லிகை புது ரோட்டுக்கு அருகாமையில் இருக்கும் நன்னீர் வசதியுள்ள 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும் தொடர்புகொள்ள த. கெங்காதரன் 124, 3ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம்.
[C-3316]

கருவாடுக்கேற்ற அரைத்த உப்புத்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் M G M 777.K. K. S. Road, Jaffna. T. P 22611
[C 3365]

### சேவை

திருப்தியான சேவைகள் 'போட்டோஸ்ரட்', பிரதிகள் ''ரோனியோ'' பிரதிகள், ''தமிழ் - ஆங்கில ரைப்பிங்'' வேலைகள் யாவுக்கும், கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C 3367)

### தேவை

பிடவை வியாபாரம் செய்ய பெண்பிள்ளைகள் தேவை நேரில் வரவும், த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ். 21, நவீன சந்தை. யாழ்ப்பாணம்.
(C 3346)

பாண், பிஸ்கட் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்களும் பாண், பிஸ்கட் விற்பனை செய்யக்கூடியவர்களும் தேவை. தகுந்த சம்பளம், கமிசன் வழங்கப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும். கிறீன் ஸ்ரார் பேக்கவுஸ். மாதகல்.
C-3344

மருதடி எழும்பிள்ளையார் தேவஸ்தானத்தினல் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கற்பூரத் தொழிற்சாலையில் கற்பூரம் அடிப்பதற்கு பெண்கள் தேவை. ஆண் விற்பனையாளர்களும் தேவை. முன் அனுபவம் உடையவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும், வேலைசெய்ய விரும்புபவர்கள் ஞாயிற்றுக்கிழமை 13ம் திகதி காலை 10-00 மணிக்கு சுண்டிக்குளி றக்கா ரோட்டில் இருக்கும் மருதடி ஆலயத்தில் நேரில் சமுகமளிக்கவும்.
[C 3355)

உங்கள் வீட்டில் குடிசைக் கைத்தொழில் ஆரம்பிப்பதற்கு முதலீடு தேவையற்றது. மூன்று பெண்தொழிலாளர்கள் தினமும் பதினைந்து கிலோகிராம் இழைக்கயிற்றை அல்லது ஐம்பது தும்புத் தடியை தயாரிக்க முடியும். பயிற்சித்திட்டம், மூலப்பொருள், மரத்தறிகள் விநியோகிக்கப்படும். நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். தேசிய தும்புத் தொழிலகம், சப்பல் வீதி, யாழ்ப்பாணம்
(C 3366]

கடைகளுக்கு பொருட்களை கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஊக்கமுடைய இளம் வயதுடையோர் தேவை. கவர்ச்சிகரமான கொமிஷன் விற்பனைக்கு வழங்கப்படும். பைலட் டிஸ்ரிபியூட்டேர்ஸ், 151. (நாயன் மார்கட்டு சந்தி), செம்மணி ரோட். நல்லூர் (C 3372]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வகுப்புகள்

புதிய, காலைநேர நாளாந்த ஒரு மணித்தியால வகுப்பு Spoken English ஆரம்பமாகின்றது. ஆசிரியர் S. B. Iyar, இடம் 12, வைமன் வீதி, நல்லூர். நேரம் காலை 7மணி-8 மணி வரை. ஆரம்பமாகும் நாள் வருகிற 10ம் திகதி வியாழன்.
(C-3333)

பேச்சு ஆங்கிலம் வகுப்புகள் உடன் ஆரம்பிக்கவிருக்கிறது. வகுப்பில் சேர விரும்புவோர் உடன் பதிவு செய்யவும். மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது. பைலட் இன்ஸ்ரிடியூட், செம்மணி ரோட், கல்விக் கந்தோருக்கு அண்மையில்), நல்லூர்.
(C 3371)

Electronic Engineering English Medium - B Sc. 1st year Level வயறிங், ரேடியோ, ரீவி (Antenna and Deck), வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், English Typing, புதிய வகுப்புக்கள் செய்முறைப் பயிற்சிகளுடன் 12-07-86 இல் ஆரம்பமகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall, ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்), 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C 3359)

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தையிட்டி காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற வயிரவப்பிள்ளை பாலகிருஷ்ணன் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரீ/282

பாலகிருஷ்ணன் கைம்பெண் மீனகாந்தி. பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை

மனுதார்.

எதிராக

பராயமற்றவர்கள்

1. பாலகிருஷ்ணன் மகள் அனுஷ்யா.
2. பாலகிருஷ்ணன் மகள் துஷ்யா.
3. பாலகிருஷ்ணன் சுஷானந்தன் (1-3ம் எதிர்மனுதார்கள் பராயமற்றவர்கள். தங்கள் பாதுகாவலர் 4-ம் எதிர்மனுதார் மூலம்)
4. ஆறுமுகம் பொன்னையா, எல்லோரும் பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவராவது 1986ம் ஆண்டு யூலைமாதம் 30ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு யூன் மாதம் 25ம் திகதி

கோட்டுக்கட்டளைப்படி,

**வி. இராமச்சந்திரஐயர்,**
பதிவாளருக்காக.

வரைவு:
மு. யோககுமார்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 3314)

## அனுமதி பெறவேண்டும்

வவனியா, செவ் வவனியா மாவட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ள வன பகுதிக்குள் வசிக்கும் மக்கள் தாம் அங்கு குடியிருப்பதற்கு வன்னி இராணுவ இணைப்பதிகாரியிடம் எழுத்துமூலமான அனுமதியினை பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

### காணவில்லை

கொட்டக்கலையைச் சேர்ந்த தங்கவேலு சரோஜா, லதா, ஆகிய 15 வயதிற்குட்பட்ட வீட்டு உதவியாளர்களான இரு பெண் பிள்ளைகளை 3 - 7 - 86 முதல் காணவில்லை இவர்கள் வீட்டிலுள்ள நகை பணம் ஆகியவற்றையும் களவாடியுள்ளனர். தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய இடம், 71/9, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.
(C 3362)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

### சித்த மருத்துவத்துறை

திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

1986—87ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத் துறையின் பி எஸ். எம். எஸ் பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்

(அ) 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதியன்று 17 வயதிற்குக் குறையாதவராக இருக்கவேண்டும்.

(ஆ) 1984 ஆகஸ்ட் அல்லது 1985 ஆகஸ்ட் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும, விண்ணப்பப்பத்திரமும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தேர்வு) தேர்வுக்கிளை, அவர்களிடமிருந்து நேரில் எனின் ரூபா 10-க்கான பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் எடுக்கப்பட்ட காசுக் கட்டளையையோ, போஸ்ரல் ஓடரையோ ஒப்படைத்தல் மூலமாகவோ, தபால் மூலம் எனின் 23 x 10 செ மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு விலாசமிட்டு ரூபா 10-க்கான காசுக்கட்டளையை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 10-8-1986.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(A916)

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மரணசாதனம் ஏதும் எழுதாது காலஞ்சென்ற தும்பளையைச் சேர்ந்த சபாரத்தினம் சிவஞானபவாவின் சொத்து விடயமாக.

காலஞ்சென்றவர்.

1 சபாரத்தினம் சிவஞானபவா கைம்பெண் சுசீலா

மனுதார்.

வழ. இல. T/1227

எதிர்

1. சிவஞானபவா விசாகர் (பராயமற்றவர்)
2. சிவஞானபவா சேதுராஜ் (பராயமற்றவர்)
3. இராமசாமி சபாரத்தினம் (வழக்குப்பாதுகாவலர்)

எதிர்வாதிகள்.

மேற்குறித்த இலக்கவழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறித்த எதிர்வாதிகள் அல்லது அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1986ம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் அவற்றைக் காட்டுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1986ம் ஆண்டு ஆனி மாதம் 30ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.

**சண்முகம் நடராசா,**
பதிவாளர்.

வரைவு:
வ. கு. கணபதிப்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி.
புலோலி மேற்கு,
புலோலி.
(C 3322)

### 31-வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



சாஸ் அன்ரன் சபாபதி

அன்னை மடியில்: 21 5.1929

ஆண்டவன் அடியில்: 9.6 1986

மல்லாகத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற நில அளவையாளர் செல்லையா யோசேப் சபாபதி பிறக்சிடா சபாபதியின் அன்பு மகனும் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும் ஆவர். நோயுற்ற வேளையில் அன்புடனும் பரிவுடனும் சிகிச்சையளித்த டாக்டர் சிவக்குமார் அவர்கட்கும் 19ம்இலக்கவாட் உதவியாளர்கள் அனைவர்க்கும் அன்னாரின் இறுதிச் சடங்கில்கலந்துகொண்டவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

211/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
C 3370

## Wanted Immediately
## REGISTERED PHARMACIST

Registered Pharmacist needed to work full time at Green Memorial Hospital, Manipay.

Salary negotiable.

For further particulars please contact:

The Acting Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay.

Applications closes on 31.7.86.

(A 915)

### உடனடி பிரயாண ஒழுங்குகள்
## விசேஷ சேவை
### சவுதி அரேபியா

**கிளீனேர்ஸ்:-**

வைத்தியசாலை, விமான நிலையம்,
மத்திய தொலைபேசித் திணைக்களம்.

20 நாட்களுக்குள் பிரயாணம் செய்யக்கூடிய ஒழுங்குகள் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேர்சல் ஏஜென்சீஸ்**
**இல. 125 (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் முன்பாக - ஆயுர்வேதக் கல்லூரி அருகாமையில்)

(A 776)

# போராளிகளுக்கு விளக்கம் கிடைத்த பின்பே கொழும்புக்கு வருவது பற்றி கூட்டணி முடிவு

## இந்தியத் தலைவர்களுடன் 'அமிர்'குழு தீவிர ஆலோசனை

சென்னை, ஜூலை 8

இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் இலங்கை அரசு முன் வைத்த திட்டங்களில் தமிழ்ப்போராளிகள் கண்டுள்ள சில முரண்பாடுகளை தெளிவாக்க இந்தியா இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

இவ்விளக்கம் சம்பந்தமான இலங்கை அரசின் பதில் கிடைத்தபின் த. வி. கூட்டணி அடுத்த செவ்வாய் கொழும்பில் நடைபெறவுள்ள அனைத்துக்கட்சி மாநாட்டில் கலந்துகொள்வதா இல்லையா என முடிவெடுக்கும்.

இதற்கிடையில் த. வி. கூட்டணி செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம், தலைவர் திரு. சிவசிதம்பரம், பொலிட்பீரோ உறுப்பினர் திரு. சம்பந்தன் ஆகியோர் நேற்று முன்தினம் புதுடில்லியில் இந்திய தலைவர்களையும்கொள்கை ஆலோசனை கமிட்டி தலைவர் திரு. ஜி பார்த்தசாரதி, நிர்வாக இணைஅமைச்சர் திரு. திரு. பி. சிதம்பரம் வெளியுறவுசெயலர் திரு. எ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரையும் சந்தித்து இலங்கை ஜனாதிபதியின் திட்டங்கள் சம்பந்தமான தம் ஐயப்பாடுகளை எடுத்துக் கூறினர்.

### முரண்பாடுகள்

இச் சந்திப்பில் அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பது குறித்தும் வேறுபல அம்சங்கள் குறித்தும் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரங்கள் மாகாண மன்றங்களிடம் அளிக்கப்படுமென டில்லிக்கு அனுப்பிய மகஜரில் கூறப்பட்டுள்ளபோதிலும் ஜனாதிபதி அனைத்துக் கட்சி மாநாட்டில் ஆற்றிய உரையில் இவ் அதிகாரங்கள் ஆளுனரிடம் அளிக்கப்படும் என்பதுபோல் அமைந்துள்ளதாக திரு, அமிர்தலிங்கம் கூறினார்

இவ் அதிகார மாற்றம் அரசியல் திருத்தச்சட்டம் ஒன்றின் மூலம் கொண்டுவரப்படுமா அல்லது சாதாரண சட்டமூலம் நிறைவேற்றப்படுமா என்பதிலும் சில கருத்துவேறுபாடுகள் உள்ளதாகவும் மாகாணங்களில் உயர்நீதிமன்றங்கள் அமைப்பது பற்றி எதுவித திட்டங்களும் காணப்படவில்லையென்றும அவர் கூறினார்.

புதிய யோசனைகளில் நாம் திருப்தியடைந்துவிட்டதென கொள்ள முடியாதென்றும் ஆனாலும் பல அம்சங்கள் குறித்து தமக்கு தனிப்பட்ட கருத்துகள் இருப்பதாகவும் மேலும் அவர் கூறினார் (சிவ

## தமிழ்பகுதிகளை ஒன்றிணைத்து கிழக்கில் ஒருதனி தமிழ் மாகாணம்?

### இ. தொ. கா. யோசனைபற்றி ஜனாதிபதி ஆலோசனை

சென்னை, ஜூலை 8

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலிருந்து தனியானதொரு தமிழ் மாகாணத்தை ஏற்படுத்தலாமென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கோரிக்கை குறித்து விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தன கேட்டுள்ளதாக இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் நேற்றுமுன்தினம் சென்னையில் தெரிவித்துள்ளார்.

இவ் அறிக்கை குறித்து ஆராய ஜனாதிபதி ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். கிழக்குப் பகுதியில் தமிழர்கள் அதிகமாகவுள்ள பகுதிகளை தேர்ந்தெடுத்து அவற்றை தமிழ் மாகாணம் ஒன்றின்கீழ் கொண்டுவரமுடியுமென்றும் இம் மாகாணத்தை தமிழ் முதலமைச்சர் ஒருவர் மூலம் நிர்வகித்து இந்த மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண மன்றம் ஒன்று அமைக்கலாமெனவும் திரு. தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தைமூலம் தீர்வென்று அமையும்வகையில் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள்பற்றி இ. தொ. காவின் கருத்திற்கு ஜனாதிபதி செவிசாய்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரச்னையை தீர்த்துவைப்பதற்கு பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை அரசின் புதிய திட்டங்கள் வழிகோலுமென்றும் தாக்குதலை முடிவுக்கு கொண்டுவந்து அரசியல் தீர்வொன்று ஏற்பட உதவும்வண்ணம் இலங்கை அரசும், போராளிகளும் முன்வரவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் இப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் திரு ராஜீவின் நல் முயற்சிகளையும் பாராட்டினார். [சிவ]

## தெ. ஆபிரிக்காவில் வெள்ளையரல்லாதோரின் கொலைகள் தொடருகின்றன

கேப்டவுன், யூலை 8

தெ. ஆபிரிக்காவில் டேபர்னுக்கு அருகில் வெள்ளையர் அல்லாதோர் 3 பேர் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டார்கள்.

கிழக்கு ரான் பகுதியில் வார இறுதியில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும் நெருக்கடி நிலையின் கீழ் செயல்படும் அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையிற் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் ஜப்ரிகொவ்வின் தெ. ஆபிரிக்க பயணம் பிரிட்டோரியா அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இவர் சிம்பாவே சாம்பியா பயணங்களை மேற் கொள்வாரென வெளியுறவு அலுவலக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.



மானிப்பாயில் இன்று

# திறப்பு விழா

✶ உள்நாட்டு-வெளிநாட்டு தொலைபேசி (Telephone) ✶ தொலைத் தொடர்பு (Telex)

இன்று புதன்கிழமை (09-07-1986) காலை 6 மணியளவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் திறந்துவைக்கப்படும்.

இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்




International Communication Complex.

282 A, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

✶ பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே நிம்மதியாக, நேரடியாக உலகின் எப் பகுதிக்கும் தொடர்புகொள்ள-

✶ இரவு-பகல் 24 மணி நேரமும், வாரம் பூராவும் தொடர்ச்சியான சேவையைப் பெற

தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே ஒரு நவீன

தகவல் தொடர்பு நிலையம்!

(A 777)


## "சைவப்புலவர் வல்லிபுரம் வாழ்க்கை நூலாகவேண்டும்'

### பவளவிழாவில் கருத்து

நெல்லியடி, செவ்.

''சமூக அடக்குமுறைகளைக் கண்டு ஒரு சிலர் மதம் மாறிய காலகட்டத்தில் கார்த்திய போராட்ட முறைகளை மேற்கொண்டு அநியாயத்தை எதிர்த்துப் போராடிய பெருமை வதிரி சைவப்புலவர் வல்லிபுரத்துக்கே உரியது. தனது சமூகம்அடக்குமுறைக்கு இலக்காவது கண்டு விடாமுயற்சியுடன் அவர் பல தரப்பட்ட போராட்டங்களில் ஈடுபட்டார். அவர் வாழ்க்கை வரலாறு தழுவிய நூல் ஒன்று வெளியிடப்பட்டால், வருங்காலச் சந்ததிக்கு அது ஒளி விளக்காக அமையும்.

இவ்வாறு முதுபெரும் சைவப்புலவர் சி. வல்லிபுரத்தின் பவளவிழா வதிரியில் நடைபெற்ற போது பருத்தித்துறை லயன்ஸ் சழக முன்னைள் தலைவர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்''.

ஆசிரியர் திரு சூரன் ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சலாநிதி முருகானந்தன் மேலும் பேசுகையில்; சைவப்புலவர் சமயத்தைத் தழுவிய வாழ்க்கையை மேற்கொண்ட போதும் பரந்த மனப்பான்மை தாங்கி, சமுதாய முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்ட முற்போக்கு இயக்கங்களிலும் பங்குகொண்டார். ஆசிரியர் பலருக்கு ஆசிரியராக வழிகாட்டினார்.

''மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா பேசும்போது ''ஒரு பின் தங்கிய குடும்பத்தில் பிறந்து சைவப்புலவராக கல்விமானக, பகுத்தறிவுவாதியாக, போராளியாகப் படிப்படியாக வளர்ந்த சைவப்புலவர் இன்றைய இளைஞருக்கு ஓர் உதாரணமாக விளங்கக் கூடியவர். தமிழ் மட்டுமன்றி வடமொழி, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும், அவர் பாண்டித்தியம் பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது'' என்றார்.

சைவப்புலவரை பாராட்டும் பவள விழாவில் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

திருவாளர்கள் க. சிதம்பரப்பிள்ளை, செ இரத்தினம், க. முருகேசு, ஆ. க. குமாரசாமி, தெணியான், க கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் பேசினர்.

## இன்று அரசடி விநாயகர் மஹாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் வண்ணை அருள்மிகு அரசடி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன் கிழமை காலை 9 30 மணிக்கு வரும் சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் சகலாகம சங்கிரகர், கிரியாக்கிரமஜோதி முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ ரா. சர்வேஸ்வரக் குருக்கள் இம் மகா கும்பாபிஷேகத்திற்கு பிரதிஷ்டா பிரதம குருவாக இருப்பார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் வழங்குவார். (ஐ)

**மணிவாக்கு**

நியாயமே வலிமை என்ற உறுதி
நமக்கு இருக்கவேண்டும்.
— ஆபிரகாம்லிங்கன்.

# நமது நோக்கு

## சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் இ. தொ. கா. வின் கோரிக்கை

மலையகத் தோட்டங்களில்குடியேறியுள்ளஇந்திய வம்சாவளியினரான தமிழ் மக்களை ''பின்தங்கிய'' சமூகமாக அங்கீகரித்து அவ்வாறான சமூகங்களுக்கு உதவும்அடுத்தஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் உதவிகளைப் புரியும்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனத்தைக் கேட்டுள்ளது.

இலங்கையில் மிகப்பெரிய தொழிலாளர் எண்ணிக்கையைஅங்கத்தவர்களாகக் கொண்டிருக்கும் இ. தொ. காங்கிரஸ் கடந்த பலவருடங்களாகவே சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தில் பிரதிநித்திதுவம் பெற்றுவருகின்றது. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இந்த ஸ்தாபனத்துக்கும் அதன் தலைவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்க. இருந்த போதிலும் தோட்டத் தொழிலாளர்களின் கல்வி, பொருளாதார மற்றும் சமூக விடயங்களில் இன்னமும் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு வளர்ச்சியினைப் பெற்றுக்கொடுக்க இவர்களால் முடியாமல் போனமை கவலைக்குரியதே!

அந்நிய ஏகாதிபத்திய வாதிகளால் தமது சொந்த நலன்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுவந்த இம் மககள், சுதந்திரத்துக்குப் பின்னரும் கூட இலங்கை அரசுகளால் விதேசிகளாகவே நடத்தப்பட்டுவந்துள்ளனர். எனவே வெள்ளையரின் ஒடுக்குமுறைக்கொள்கைகளுக்கு எதிராகப் போராடிவந்த மேற்படி மக்களின் ஸ்தாபனங்கள் சுதந்திரத்துக்குப் பின்னர் இன்னும்மோசமான தொரு நிலைமையை எதிர்நோக்க நேர்ந்தது.

அதாவது, அம்மக்களின் சமூகப்பொருளாதார விடயங்களைவிட அவர்களின் ஜீவாதார உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதுவே முதல்கடமையாக இருந்தது.

ஏனைய சமூகங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் தமது தொழிற்சங்க உரிமைகளுக்காகவும், சம்பளம்விடுமுறை, போன்ற பிற கோரிக்கைகளுக் காகவும் போராடிக் கொண்டிருந்த வேளையில் மலையகத் தொழிலாளர்கள் இவற்றுக்காக மட்டுமின்றி தமது குடிஉரிமை, வாக்குரிமைகளுக்காகவும் போராடவேண்டியிருந்தது. எனவே பொருளாதார ரீதியில் ஏனைய மக்களோடு அவர்கள் சமமாகத் தலைதூக்கமுடியவில்லை. பதவியிலிருந்த அரசுகளும் தமது ஓரவஞ்சனையான செயல் திட்டங்கள் மூலம் அவர்களின் வளர்ச்சிக்கு உதவவில்லை.

எனவே இன்று மலையக மக்கள் குடியியல், வாக்குரிமைகளை ஓரளவுக்குப் பெற்றிருக்கிறார்கள் எனில் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக அவர்கள் ஸ்தாபனரீதியில் நடத்திவந்துள்ள போராட்டங்களே காரணம் எனலாம்.

இவர்கள் இன்று மலையகத்தில் ஒரு பிரதான இடத்தை வகிக்கிறார்கள். இதனால் அரசியல் ரீதியில் இவர்களைப் பிரித்துக் கூறுபோடவும், பொருளாதார ரீதியில் ஒதுக்கித் தள்ளவும், இனரீதியில் ஒடுக்கியாளவும் பல சக்திகள் முன்நிற்கின்றன.

புதிதாக உருவாகிவரும் அரசியல் மாற்றங்களுக்கேற்ப இவர்கள் தம்மை நிலைப்படுத்திக்கொள்ளவும், தேசிய நிர்வாக விவகாரங்களில் பங்கேற்றுக் கொள்ளவும் தயாராகிக் கொள்வது அவசியம்.

இதற்கு பதவியிலிருக்கும் அரசுகளால் உதவிகிடைக்குமென்று எதிர்பார்க்கமுடியாது அவ்வுதவிகளில் பல்வேறுவிதமான முட்டுக்கட்டைகளுக்கிடமுண்டு. அது மட்டுமன்றி நாடு பொதுவாக எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் மத்தியில் மலையக மக்களின் வளர்ச்சிக்கென தனியான திட்டம் செயல்படுத்தப்படுவதென்பது முயற்கொம்பு.

எனவேதான் இ. தொ. காங்கிரஸ் சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் உதவியை நாடியிருக்கிறது எனக்கருதலாம்.

அண்மையில் ஜெனிவாவில் நடந்த மேற்படி ஸ்தாபனத்தின் மகாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியுள்ள இ தொ.கா பொதுச்செயலர் திரு. எம். எஸ் செல்லசாமி, தோட்டத் தொழிலாளரின் இன்றைய நிலையை அப்படியே எடுத்துக் கூறியுள்ளார்.

''இலங்கையில் தோட்டத் தொழிலாளரின் நிலை 150 ஆண்டுகளுக்கு முன்னிருந்த அதே நிலையில்தான் இருக்கின்றது ஐந்து ஆறு பேரைக்கொண்ட குடும்பங்கள், 10 தர 12 அடி கொண்ட தனி அறைகளில் வாழ்கிறார்கள்: சுகாதாரம், கல்வி, மற்றும் வசதிகள் யாவும் மிகப்பின்னடைந்த நிலையிலுள்ளன. இவைகள் சீராக்கப்படுவது அவசியம்'' என அவர் கூறியுள்ளார்.

ச. தே. தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் பின்தங்கியவர்களுக்கு உதவும் ஐந்துவருடத்திட்டம்1990ம் ஆண்டு அமுலுக்கு வருகின்றது. திரு செல்லசாமியின் கோரிக்கை ஏற்கப்படுமானால் இந்த நூற்றாண்டுக்குள் மலையகத் தமிழ்மக்கள் கல்வி, பொருளாதார சமூகத் துறைகளில் ஏனைய மக்களுடன் சரிசமமாகத் தலைதூக்கக் கூடியவர்ளாக இருப்பார்கள் என்பது திண்ணம்.

# தமிழ் அரச ஊழியர்களை விசேஷ லீவில் ஏன் அனுப்பவேண்டும்?

அண்மை வாரங்களில் பலாத்காரம நிகழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போக நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் பலாத்காரம் பெருகிப்பரவியுள்ளது. பிரஜைகளின் பந்தோபஸ்து, பாதுகாப்புகளை உத்தரவாதம் செய்ய வேண்டிய பாரதூரமான பிரச்னைக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையில் அரசாங்கம் பலவேறு பந்தோபஸ்து நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றில் சில பிரஜைகளின் அன்றாட வாழ்வில் கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்தலாம்.

இந்தப் பின்னணியில் அரசாங்கம் மேற் கொண்டுள்ள ஒரு நடவடிக்கையை சில அரசாங்க ஸ்தாபனங்களில் தமிழ் ஊழியர்கள் விஷேச லீவில் அனுப்பப்பட்டிருப்பதை எமது இயக்கம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறது. எமது இயக்கம் இது பந்தோபஸ்துப் பிரச்னையைத் தீர்க்க ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிமார்க்கம் அல்ல என்று அபிப்பிராயப் படுகிறது. மேலும் எல்லாச் சமூகங்களை சோந்தவர்களும் லஞ்சத்திற்கு மசியலாம், ஊழலுக்கு இரையாகலாம், பயமுறுத்தலுக்கு அடிபணியலாம். இந்த வகையான ''தீர்வில்'' ஆபத்து அம்சம் பொதுவானது என்பது திசை திருப்பப்பட்டு, பந்தோபஸ்து ஸ்தாபிதமாகி விட்டது என்ற பிரமையை ஏற்படுத்தலாம். பலன் எதிர் மறையானதாசமுடியும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், கட்டுநாயக்க எயர்லங்கா அலுவலகம் ஆகியன உட்பட பல்வேறு அரச திணைக்களங்களிலும் தமிழ் ஊழியர்கள் வேலைக்கு வராதிருக்கும்படி பணிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

ஒலிபரப்பு, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த 160 க்கும் அதிகமான தமிழ் ஊழியர்கள் லீவில் அனுப்பப்பட்டுள்ளதாக எமது இயக்கத்திற்கு அறியக் கிடைத்துள்ளது மேலும் தமிழர் ஒருவரை கணவராகப் பெற்ற ஒருசிங்கள மாதும், பெற்றோரில் ஒருவர் தமிழராக உள்ள மாதை மணந்த ஒரு சிங்களவரும், தமிழர் ஒருவரை மணந்த ஒரு முஸ்லிமும் லீவில் அனுப்பப்பட்டுள்ளனர். எவ்வாறிருந்த போதிலும்,விஷேசமாக முக்கியமான இடங்களைப் பொறுத்த மட்டில சகல தமிழர்களும் சுயமாகவே சதி வேலைகளில் ஈடுபட்டவர்களாகவும் இவ்வாறானசெயல்பாடுகளுக்கு உடன்பாடுடையவர்களாகவோ அல்லது இதில் பங்கு கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாகவோ உள்ளார்களென்று சந்தேகிக்கப்படுகிர்களென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தோன்றுகிறது

தமிழ் ஊழியர்களை லீவில் அனுப்பும் தீர்மானம் குறுகிய நோக்குடைய யோசனையற்ற செயற்பாடென எமது இயக்

(5ம் பக்கம் பார்க்க)

**டெஸ்மண்ட் பெர்னாண்டோ**

செயலாளர், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம்

இன்று

# இறைபணியில் வெள்ளிவிழாக் காணும் உடன் பிறவிகள்

அமல மரித் தியாகிகள் சபையின் வடமாநில முதல்வர் அருட் திரு. லூயீஸ் பென்னையா அடிகளார் தமது இறைபணியின் இம் மண்ணிற்கும் மக்களிற்கும் ஆற்றிய அரும் பணியின் இருபத்தைந்தாண்டு நிறைவு வெள்ளிவிழாவினை இன்று புதன் கிழமை கொண்டாடுகிறார். இறைபணியில் அன்னாரின் சேவையில் பிறிதொரு சிறப்பொன்றும் இணைந்து நிற்பது மேலும் மகிழ்ச்சிக்குரியதாகும். அன்னாரின் உடன் பிறப்பாம் அருட் சகோதரி திரேசா கிறேஸ் பொன்னையா A. C. அவர்களது துறவற வெள்ளி விழாவாகவும் இந் நிகழ்ச்சி அமைகிறது. ஒரே காலத்தில் இருவர் ஓர் குடும்பத்தில் இறைப்பணியால் இன்பங் காண்பது மக்களுக்கும் இந்த மண்ணுக்கும் இந்த மாநிலத்துக்கும் ஒரு பெரும் பேறுதான்.

சிப்பியிலேதான் முத்து இருக்கிறது. ஆனல் சிப்பிக்கு அது சொந்தமல்ல. திரு முத்தையா குடும்பத்திலும் இரு நல்முத்துக்கள் இறைமஞ்சத்தின் சொத்துக்களாகி வெள்ளி விழாக் காணும் இந்த இரு துறவிகளும் சுண்டிக்குளியை பிறப்பிடமாகக் கொண்டவர்கள் 22-8-1930-ல் பிறந்த அருட் திரு. லூயீஸ் பொன்னையா அமதி. அடிகளார் ஞானப்பணிகளால் தன் அறிவைப் பெருக்கி கொழும்பிலும், அம்பிட்டிய குருமடத்திலும் அதன் வளர்ச்சிப் படிப்பை ரோமாபுரியிலும் மேற்கொண்டு 12-7-1971-ல் குருத்துவ அழைப்புக்கு 31-வது வயதில் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் இருபத்தைந்து வருட துறவற வாழ்வில் மதச் சடங்குகளுடன் மட்டும் நின்றுவிடாது மூடக் கொள்கைகளை விடுத்து புனித கடமைகளை மக்களுக்கு உணர்த்துவதில் எதிர்நீச்சலடித்துதன்பணியின் புனிதத்தை காத்து வளர்த்தவர். இன்று சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் தனது 25 வருட பயணத்தினை இறைவன் துணையோடுவெற்றி கொண்டதற்கான நன்றிப் பலிதனை நடாத்துகின்றார். அவரது வெற்றிப் பயணத்தில் எல்லா இதயங்களும் இணைந்து இறைவனுக்கு நன்றி பகருவோம்.

அவர் தனது பணிக்காலங்களை பாண்டியன் தாழ்வு பங்கிலும் மலேசியாவிலும் பணியாற்றி அந் நாட்டின் கீர்த்தி மிகக ஒரு துறவியெனப் புகழ் சேர்ந்த பெருமையுடன் எல்லோர் மனதிலும் நிலைத்து வாழ்கிறார்.

சொந்த நாட்டிலும் அவர் பணியினை செய்ய இறைவனது சித்தமாக இருந்ததால் பேசாலை, தாழ்வுபாட்டு மக்கள் மத்தியில் பங்கு தந்தை பணிக்காக அழைக்கப்பட்டார். அவரது தூய்மையான துறவற சேவையை கண்ட அமல மரித் தியாகிகள் சபை அவரை இலங்கையில் வடமாநில முதல்வராக தேர்ந்தெடுத்தது. பிறந்த மண்ணிலும் அவர்தம் பணியை சிறப்புடன் ஆற்றி வரும் அருட்குரவரும் அவர் சகோதரியின் அன்புப் பணியும் மேலும் பொன் விழாக்களைக் கண்டு சிறக்க வாழ்த்துகிறோம்.

— யாழ்பாலன்'



உ

## அன்பருக்கு அருள்வாயே

அருள் மிகு அரசடி விநாயகா! நின்
பெருமை சேர் கருணையினற் பொலிவு பெற்றிடும்
பெருவிழாவாம் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகத்தை
திருவருள் கைகூட்டத் தரிசிப்போர்க் கருள்வாயே!

— காந்திமதி சிவநேசன்.

★

## விநாயகனை வேண்டுகின்றேன்

அன்பருக்கு அன்பனே அரசடி விநாயகனே!
அல்லலை அறுத்திடுவாய் ஐங்கரனே!
வஞ்சனை வளர்த்திடும் மாந்தரெல்லாம்!
வளம் பெறஉனையே வேண்டுகின்றேன்!
கொஞ்சமும் நான் உன்னை மறக்கவில்லை
கொலைகளை நிறுத்திவிடும் விக்கினேஸ்வரனே!
தஞ்சமென உனை நாம் அடைந்தோம்
தருவாய் அருள்நீ விநாயகனே.

கௌரி கணேஷநாதன்.

★ [இன்று 9-7-86 வண்ணை அரசடி விநாயகரின் மஹாகும்பாபிஷேகம்.]

## தமிழ் அரச ஊழியர்களை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கம் கருதுகிறது இது தமது நிறுவனங்களுக்காக பல்லாண்டுகாலம் பணியாற்றிவரும் தமிழ் ஊழியர்களை மனம் நோகச்செய்துள்ளதுடன் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலுள்ள வெளியினை மேலும் ஆழமாக்கியுள்ளது. இது அரசிலிருந்து அவர்களை வேறுபாடடையச் செய்வதுடன் விசுவாசத்தையும் இழக்கத் தூண்டுகிறது. சகல தமிழர்களும் பாதுகாப்பு இடருக்குக் காரணகர்த்தாக்கள் அல்லது காரணகர்த்தாக்களாகலாம் என்று இது கருதச் செய்கிறது. இவ்வாறாக சகல தமிழர்களும் அரசுக்கெதிரான கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டுள்ளார்களென்று சிலவட்டாரங்களில் ஆபத்தான ஊகம் நிலவ இடமளிக்கிறது. சகல தமிழர்களும் தாக்குதலின் சட்டபூர்வமான இலக்குகள் ஆகலாம் என்றநோக்கை இது இலகுவாக்குகிறது.

இவ்வாறான போக்குகளுக்கு ஊக்கமளிப்பது இனப்பிரச்சினைக்கு சமாதானபூர்விமான தீர்வுஒன்றைக் காண்பதையும் இரண்டு சமூகங்களுக்கிடையில் இணக்கமான நல்லுறவுகளைபுனர்நிர்மாணிப்பதையும் ாமலும் சிக்கலாக்குகிறது.

இனப்பாகுபாட்டின் சகல வடிவங்களையும் இல்லாதொழிப்பது பற்றிய ஐ நா. பிரகடனம் இனப்பாகுபாட்டின் சகல வடிவங்களையும் இல்லாதொழிப்பது பற்றிய சர்வதேச உடன்படிக்கை, சர்வதேச தொழில்நிறுவனத்தின் வேலைவாய்ப்பு, தொழில் சம்பந்தமான பாகுபாடு பற்றிய உடன்படிக்கை என்பவற்றின் சில ஷரத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர எமதியக்கம் விரும்புகிறது.

எனவே இத் தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறும், விசேஷ லீவில் அனுப்பபட்டுள்ள தமிழ் ஊழியர்களை திரும்ப அழைக்குமாறும் சகல அரச நிறுவனங்களுக்கும் பணிப்புரை வழங்குமாறும் எமது இயக்கம் அரசாங்கத்தை வினயமாக வேண்டிகொள்கிறது. இந்தத் தீவிர செயற்பாடுகள் இல்லாமல் பந்தோபஸ்து பாதுகாப்பு நலன்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென எமது இயக்கம் கருதுகிறது. இந்தத் தீர்மானத்தை மீளாய்வு செய்வதன் மூலம் அரசாங்கம மனித உரிமைகளுக்கான தனது பொறுப்புக்களையும் இலங்கையின் சகல பிரஜைகளும் தமது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதனை உறுதிச் செய்யும் அரசியல் தீர்வுக்கான தொடர்சியான அதன் தேடலையும் வெளிப்படையாக்கலாம்

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் கிளைநிலையம் ஒன்று இன்றுகாலைநல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபம் முன்பாகத் திறந்துவைக்கப் படவுள்ளது. (மா)

## படகுவிபத்தில்- -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு ஒத்துழைப்பு நல்கிய ஈழ புரட்சி (ஈரோஸ்) அமைப்பினரை தோழமையுடன் நினைவு கூருகின்றோம்.

மக்களின் விடுதலைக்காக மரித்த எம் தோழர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி 10-7-86 அன்று மாலை 3 மணி முதல் கடைகளை பூட்டி போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தி கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு மக்களுக்காக மரணித்த தோழர்கட்கு அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகின்றோம்.'' [மா]

மட்டு. வவுணதீவு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டதாகவும் தெயவருகிறது.

அதிரடிப் படையினர் தரப்பில் ஏற்பட்டுள்ள சேதவிபரம் பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. (மா]

## அதிகார...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வான பொறுப்பு, அவற்றின் அதிகாரங்கள் முதலிய விடயங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டன. ஆனுல் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மாகாணத் தேர்தல்களில் போட்டியிடலாமா? அவர் முதமைச்சராக வரலாமா? என்பது பற்றி பின்னர் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியஜனுதிபதி, இன்று முதல் தாம் ஒவ்வொரு மாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுடனும் இது குறித்து பேசவுள்ளதாகவும், இறுதியாக அனைவரையும் இணைத்துக் கூட்டமொன்றில் மீண்டும் இவ்வாலோசனைகள் ஆராயப்படும் என்றும் கூறினுர்

உத்தேச மாகாணசபைகளை ஆஸ்ட்மாத மத்தியில் அமைக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வருவதற்கான திட்டமொன்றையும் ஜனுதிபதி தெரிவித்தார். (ரா - வா]


வின்ஸர் திரையரங்கில் அனேகரின் வேண்டுகோளிற்கிணங்க மீண்டும்
சரத்பாபு- சுமணலதா-
M N. ராஜம்-சுந்தரராஜன்
வீரப்பா நடித்த
**திசைமாறிய பறவைகள்**
புத்தம் புதிய கொப்பி
**வின்ஸர் மினியில்**
8 அடித்திரையில்
கமல் [இரு வேடம்]
ஸ்ரீப்பிரியா-சோபனு
V.K. ராமசாமி- மனோரமா
நடித்த
**எனக்குள் ஒருவன்**
(புதிய வெளியீடு]

லிடோ
இன்று முதல்
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா
நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**லிங்டன்**
10 30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill


## யாழ். வண்ணை அரசடி விநாயகர் கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

# யாழ்பாடியால் வழிபடப்பெற்ற வண்ணை அரசடி விநாயகருக்கு இன்று பெருஞ்சாந்தி விழா

ஐந்து கரத்தனை
ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை
ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி
போற்று கின்றேனே.


**சைவ** சமயிகளின் எல்லாக் கருமங்களுக்கும் முதல் வணங்கப்படும் பெருமை விநாயகப் பெருமானுக்கே உண்டு. விநாயகப் பெருமான் சாணம்- சந்தனம், கூர்ச்சம் முதலிய சாதாரணமான பொருள்களையே ஆதாரமாகக்கொண்டு அன்பரின் வழிபாட்டை ஏற்றருள்வார். எளிமை நிறைந்த வழிபாட்டை ஏற்றநளும் பெருமையுடைய விநாயகப் பெருமானின் அருளும் பெருமையும் தத்துவமும அளப்பரியது. இராவணன், தேவேந்திரன் அகத்தியர் முதலியவர்களால் வணங்கப்பெற்று இவர்களுக்கொல்லாம் நிலையான சிறப்பை அருளிய விநாயகப் பெருமான் கீர்த்தியுடன் கோயில் கொண்டு விளங்கும் ஆலயங்கள் பல யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் உண்டு. ஆனல் யாழ்ப்பாண நகருக்கு யாழ் என்னும் இசைக் கருவியின் பெயராலேயே பெயரும் புகழும் அமைததற்குக் காரணமாய் இருந்த யாழ்பாடி என்னும் இசை மேதையால் வழிபடப்பெற்ற- அந்த இசை மேதைக்கு அருள்புரிந்த விநாயகப் பெருமான் உறையும் கோவில்தான் யாழ். அரசடி விநாயகர் கோயிலென்பதனுல் இவ்வாலயத்தின் பெருமையைச் சைவமக்களாகிய நாம் எல்லாம் எளிதிலுணர்வதோடு இவ்வாலயத்தின் முதன்மையும் சிறப்பும் யாழ். சைவ மக்கள் அனைவருக்கும் உரிமை உடையதாகும் என மகிழ்தல் வேண்டும்.

யாழ்பாடி என்னும் இசை மேதையால் வணங்கப் பெற்றதை உறுதிப் படுத்துவது போல இன்றும் வாரம் தோறும் இசை வகுப்புகளும் வருடந்தோறும் சிறப்பு இசை கச்சேரிகளும் நடைபெறுவதற்குரிய இடமாகவுள்ள யாழ் சன்மார்க்க வித்தியாசாலை உருவாவதற்குக் காரணமாயும் இவ்வித்தியாசாலைக்குரிய நிலத்தை உடையவராகவும் யாழ் அரசடி விநாயகப்பெருமான் விளங்குகின்றார் என்றஇரகசிய உண்மையினை அறியும் தோறும்விநாயகர்அடியார்கள் ஒவ்வொருவரும் ஆனந்தம் அடைவர் என்பது திண்ணம்.

பெருங்கருணைத்தடங்கடலாக விளங்கும் யாழ் அரசடி விநாயகப் பெருமான் ஆலயம் புதிப்பிக்கப்பட்டு முன்மண்டபமும் புனரமைக்கப்பட்டதை தொடர்ந்து இன்று காலை 6-00 மணிக்கும் 9-30 மணிக்குமிடையில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இக்கிரியைகள் இம் மாதம் 5ம் திகதி சனிக்கிழமையே ஆரம்பமாகியுள்ளன கும்பாபிஷேகக்கிரியைகளை நடத்தும் பிரகம குருவாக சுன்ஞகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் அமைத்திருக்கின்றார்கள். இவருக்கு உதவியாக இருக்கும் குருமாரும் குருக்கள் அவர்களும் பல இடங்களில் கும்பாபிஷேகம் முதலிய ஆலயக்கிரியைகளைக் பக்தி பூர்வமாக நடாத்திவைத்துப் பெருமை பெற்றவர்கள்.

**ப. சந்திரசேகரம்**
செயலாளர்,
பரிபாலனசபை

சைவாலயக் கும்பாபிஷேகம் ஆகக் குறைந்தது 12 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறவேண்டும் என்பதும் 12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பாபிஷேகம் தூபி அபிஷேகம் என்பனவற்றைத் தரிசிப்பவர்கள் 12 வருடம் தினமும் வழிபடுவதனுல் அடையத்தக்க சிறப்புக்களை அடைவர் என்பதும் ஆகமம் வல்ல அறிஞர்களின் கருத்தாகும் ஆகமக் கிரியைகள் பலவும் விரிவாகவும் விளக்கமாகவும் நடைபெறும் கும்பாபிஷேகக் கிரியைகளைத் தரிசிப்பதும் கிரியைகளுக்கு உதவுவதும் நம் வாழ்வில். நேரத்தையும் பொருளையும் சிவமயமாக்கும் செயல்களாக அமையும்.



### பிரதமகுரு ஆசி

''அங்கிங்கென்னுதபடி எங்கும் நிறைந்து நீக்கமற உள்ள இறைவனை மந்திரங்கள், புவனங்கள், தத்துவங்கள் பதங்கள், வர்ணங்கள் ஆகிய சக்திஸ்தாபனங்களோடு தொடர்பு படுத்தி நாமெல்லோரும் பார்த்தும், உணர்ந்தும் வழிபடு செய்யக்கூடிய திருவுருவத்தில் உறைந்தருளச் செய்தலே குடமுழுக்கு எனப்படும் கும்பாபிஷகமாகும். நித்தி நைமித்தியக்கிரியைகளினுல் வளர்ந்தோங்கும் திருவருளும் வழிபாட்டு முறைமையும் ஆலயப் பொலிவும் சிறக்க கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது இப் பெருவிழா பெருஞ்சாந்தி எனப் போற்றப் படுகிறது. பல மன்னர்களின் ராஜதானியாகவும், பல சமய சன்மார்க்கர்களின் உறைவிடமாகவும் விளங்குகின்ற யாழ்ப்பாண நகரின் மத்தியில் வண்ணை அரசடி விநாயகர் பரிவார தேவதா சகிதம் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது எமக்கெல்லோருக்கும் பேரருளைத்தருவதொன்றும். அதில் முன்னின்று தொண்டாற்றிய பரிபாலன சபையினர் சகல உதவிகளையும்வழங்கியவர்கள், வழிபாடு ஆற்றுபவர்கள் ஆகியோருக்கு விநாயகப் பெருமான் திருவருள் கிடைக்கவும் கும்பாபிஷேகப் பலன் பெற்று எல்லோரும் எல்லாமும் பெற வாழ்த்துகிறோம்''

இவ்வாறு யாழ் அரசடிவிநாயகர் கோவிற் கும்பாபிஷேகப் பிரதமகுருகிரியாக்கிரமஜோதி முத்தமிழ்குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் தமது ஆசியுரையில் தெரிவித்துள்ளார்.


வண்ணை அரசடி விநாயகர்
மகாகும்பாபிஷேகம் சிறப்புற
**வாழ்த்துகிறோம்.**
**செல்லையா சிவபாதலிங்கம்,**
வைரக்கல் நகை வியாபாரம்
220A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23794

வண்ணை அரசடி விநாயகர் திருவருள் எங்கும் பொலிக!
**நியூ புஸ்பா ஜுவல்லர்** 284 (106), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## நெல்லியடியில் கஞ்சா பேர்வழிகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்
நெல்லியடியில் போதைப் பொருளான கஞ்சாவை விற்ற, வாங்கிய மற்றும் அதனைப் பாவித்த மூன்று இளைஞர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

இந்த மூன்று இளைஞர்களும் நெல்லியடி சந்தையில் தகிக்கும் வெயிலில் பல மணித்தியாலங்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டனர்.

வெயிலின் கொடுமை தாங்க முடியாது அம்மூன்று இளைஞர்களும் அவஸ்தைப்பட்டனர்.

தொடர்ந்து பிற்பகல்வேளை அவர்கள் வைத்திருந்த கஞ்சா சந்தியில்வைத்து எரிக்கப்பட்டது. பின்னர்மூவரும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். [மா]

## மின்சாரம் வழங்க ஏற்பாடு

உடுவில், செவ்.
உடுவில் தெற்கு சத்தியபுரம் மல்வம், புதுமடம் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான சகல வேலைகளும் முடிவடைந்துள்ளது.

## யாழ். மாவட்ட இந்து ஆலயங்களின் வரலாற்றுத் தொகுப்பு

நெடுந்தீவு, செவ்.
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் வரலாறுகளைத் தொகுத்து, ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பகுதிக்கு ஒரு நூல் என்ற அடிப்படையில் ஆலய வரலாறு, வெளியீட்டுத் திட்ட நூலாக வகுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு ஒரு குழுவும், உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆலய வரலாறுகளைத் தொகுத்து எழுதுவதற்குப் பொருத்தமான நூல் ஆசிரியர்களையும் யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கிவரும் கலாசாரப்பகுதி நியமித்துள்ளது.

ஆலயங்களின் விபரங்களை அவ்வப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் தமது பகுதி சிரேஷ்ட சேவை அலுவலர் மூலம் திரட்டித் தரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

விபரங்கள் எவ்வாறு திரட்டப்படவேண்டுமென்பதற்கான கேள்விக்கொத்து அடங்கிய பத்திரங்களும் உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆலயம் பற்றிய தகவல்கள் தருபவர்களிடத்திலிருந்து அவர்களின் ஒப்பம் பெறப்படல்வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## இனப் பிரச்னை: 'அரசின் திட்டங்கள் திருப்தி அளிப்பதாயில்லை'

கொழும்பு செவ்வாய்
நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் திரு விக்கிரமபாகுகருணாரட்ண தலைமையில் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்து இனப் பிரச்னையைத் தீர்க்க அரசு சமீபத்தில் முன்வைத்த திட்டங்கள் முற்றிலும் திருப்தியளிக்கவில்லை என தமது கண்டனத்தைத் தெரிவித்தது.

இத்திட்டத்தில் பல அடிப்படை மாறுதல்கள் கொண்டு வரப்பட வேண்டுமெனவும் தமிழ் பிரிவுகளின் அடிப்படைக் கோரிக்கைகளில் ஒன்றான தாயகக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுமாறும் இப்

(7ம் பக்கம் பார்க்க)

## நிதிசேகரித்து வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம் புதன்
"தமது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் கூட்டாகத் தொழில் செய்யச் சென்ற குருநகர் மக்கள் மீது வெறித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டும், ஆயுதங்களால் வெட்டிக் குத்திக் குதறியும் கொலை செய்தமையைக் கண்டிக்கிறோம்" என்று கொழும்புத்துறை மேற்கு இணக்க சபை கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதுடன் கொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் குடும்பங்களுக்கு நிதியும் சேகரித்து வழங்குவதெனத் தீர்மானித்துள்ளது.

## பொருட்காட்சி

சுழிபுரம் செவ்வாய்,
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி கல்விப் பொருட்காட்சி இன்று புதன்கிழமை நடைபெறும் பிரதமவிருந்தினராக பிரதமகல்வி அதிகாரி திரு. வே. தங்கராசா கலந்து கொண்டு பொருட்காட்சியைத் திறந்துவைப்பார். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா விசேட விருந்தினராகக்கலந்து கொள்வார்.


**பிரயாண ஒழுங்குகள்**

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

**டென்மார்க்**

கொழும்பிலிருந்து நேரடிப்
பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன்
உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]


## வெள்ளிவிழாக் காணும் துறவிகள்

யாழ்ப்பாணம் புதன்
அமலமரித் தியாகிகளின் முதல்வரான அருட்திரு கலாநிதி லூயிஸ் பொன்னையா அடிகளினதும் அவரது உடன் சகோதரியான அருட்செல்வி திரேஸ் கிரேஸ் பொன்னையாவினதும் துறவற வாழ்வின் வெள்ளி விழா இன்று புதன்கிழமை பிற்பகல் சுண்டுக்குளி புனிதர் ஸ்நாபக யுவானியார் ஆலயத்தில் கொண்டாடப்படுகிறது. இதைத் தொடர்ந்து சுண்டிக்குளி மக்களால் ஒரு பாராட்டு விழாவும் நடத்தப்படவிருக்கிறது. (ஐ)


**பிரயாண ஒழுங்கு**

டென்மார்க் கனடா

ஆகிய நாடுகளுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை
செய்துகொள்வதற்கும்
வெளிநாட்டுப் பயணங்களிற்கான
பாஸ்போட், விசா, விமானச் சீட்டுக்கள்
போன்றனவற்றை குறைந்த செலவிலும்
வெகுவிரைவிலும் செய்துகொள்வதற்கு
நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய இடம்:

**லிப்ருஸ் லிமிற்ரெட்**

R. G. கட்டடம், No: 94 1/7, York Street,
இல.70, ஸ்ரான்லி வீதி, York Building,
யாழ்ப்பாணம். Colombo - 1

மற்றும்
இத்தாலி, பிரான்ஸ்,
மேற்கு ஜேர்மனி, சுவிஸ்.
ஆகிய நாடுகளுக்கு எங்களது முகவர்
18ம் திகதி உங்களைக்கூட்டிசெல்ல உள்ளார்.
பாஸ்போட், முற்பணம் தந்தவர்கள்
உடன் தொடர்புகொள்ளவும்.
[A-769]


## யாழ். அபிவிருத்திச்சபை அறிவித்தல்

1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ் அபிவிருத்திச்சபை பிரதிச் செயலாளர் (நீர். கட். வேலை) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம். கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களம்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க்காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10 10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப்பணத்தையும் கிரயப்பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ் அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| யாழ். அபிவிருத்திச் சபை உப அலுவலகம் | வேலையின் பெயர் | ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்ட தொகை(தகைமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|
| 01. ஏழாலை | நூல்நிலையக் கட்டிடம் | 75,000/- | 60/- | 25/- |
| 02. மானிப்பாய் (கிராமம்) | அலுவலகத்திலிருந்து கட்டிட விஸ்தரிப்பு மின்சார பகுதிக்கு | 40,000/- | 50/- | 25/- |
| 03. உரும்பிராய் | காரியாலயக் கட்டிடம் | 100.000/- | 100/- | 50/- |
| 04. புத்தூர் | நூல்நிலையக் கட்டிடம் | 40,000/- | 50/- | 25/- |
| 05. நீர்வேலி | நூல்நிலையக் கட்டிடம் | 100,000/- | 100/- | 50/- |
| 06. குடத்தனை | நாகர்கோவில் வீதி தாங்குசுவர் விஸ்தரிப்பு | 35,000/- | 50/- | 25/- |
| 07. குடத்தனை | நூல்நிலையம் அமைத்தல் | 70,000/- | 60/- | 25/- |
| 08. மிருசுவில் | நூல்நிலையக் கட்டிடம் | 75,000/- | 60/- | 25/- |
| 09. கச்சாய் | கொடிகாமம் சந்தைக்கு நீர் விநியோகம் | 60,000/- | 50/- | 25/- |
| 10. கொக்குவில் | நூல் நிலையக் கட்டிடம் 2ம் பகுதி | 100,000/- | 100/- | 50/- |
| 11. கொக்குவில் | ஆடியபாதம் சந்தைக் கட்டிடம் | 50,000/- | 50/- | 25/- |
| 12. கொக்குவில் | சுடலைமடம் அமைத்தல் | 35,000/- | 50/- | 25/- |
| 13. நெடுந்தீவு | நூல்நிலையக் கட்டிடம் | 40,000/- | 50/- | 25/- |
| 14. வேலணை | எல்லைச்சுவர் நீர்விநியோகப் பகுதி | 100,000/- | 100/- | 50/- |
| 15. புலோப்பளை | 5 கிணறு அமைத்தல் மசார் வீடமைப்புத்திட்டம் | 40,000/- | 50/- | 25/- |
| 16. புலோப்பளை | கடைகள் கட்டல் | 40,000/- | 50/- | 25/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச் செயலாளர் (நீர். க. வே.)

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
01.07.1986.

[A 905]


**பிரயாண ஒழுங்குகள்**
டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து
நேரடிப் பிரயாணம்)
ஜூலை 15-ம் திகதி எமது
முகவர் கூட்டிச்செல்வார்.
எமது காரியாலயத்தில்
பதிவு செய்தவர்கள்
உடனடியாகத்
தொடர்பு கொள்ளவும்.

லிபியா குவைத்
சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்
பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(A 774)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### வித்துவான் திரு. ப. சுப்பையா B A.

8-6-86-ல் அமரத்துவமெய்திய எங்கள் அன்புத் தலைவர் வித்துவான் ப. சுப்பையா அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள 10-7-86 வியாழக்கிழமை மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் உறவினர்களும் நண்பர்களும், மாணவச் செல்வங்களும், அவரது ஆன்ம அமைதிக்காக நடைபெறும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தலைவரின் இறுதி வழியனுப்பு வைபவத்திற் கலந்தும் இரங்கற் செய்தி அனுப்பியும், பல்வேறு வகையில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எம் இதயமலர்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பு மனைவி
திருமதி சு. கமலாம்பிகை
அருமைச் செல்வி
சு. உஷாதேவி.

C 3368

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

தும்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் வேலாயுதத்தின் மரண சாதனமில்லாச் சொத்துக்களின் விடயமாக.

-இறந்தவர்.

வல்லிபுரம் வேலாயுதம் கைம்பெண் நாகேஸ்வரி தும்பளை, பருத்தித்துறை.

—மனுதார்.

மரணசாதன நியாயதிக்கம் } இல. T/ 1245

எதிராக

1. வேலாயுதம் இரத்தினவேல்
2. வேலாயுதம் சண்முகவேல்
3. வேலாயுதம் சக்திவேல்
4. வேலாயுதம் மகள் நந்தினி
5. வேலாயுதம் சித்திரவேல்
6. வேலாயுதம் சிங்காரவேல்
7. சுப்பிரமணியம் வரதராசா

யாவரும் தும்பளை,
- பருத்தித்துறை.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 1ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுக்கப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஆனி மாதம் 26ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
சண்முகம் நடராசா,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

வரைவு!
பா. சுப்பிரமணியம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 3323)

## இன்றைய பலன்

மாதம்- ஆனி
திகதி 25 (9 - 7 - 1986)
கிழமை- புதன்
திதி- துதியை பி. ப. வரை
நட்சத்திரம்- பூசம்
பி. ப. வரை

மேடம்: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் மேலதிகாரிகளின் அதரவிற்கும் இடமுண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

இடபம்: சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வண்ணம் பொருள் தாராளமாகக்கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு.

மிதுனம: நெருக்கடியான சூழ்நிலை உருவாகும். சிலர் கடன் தொல்லையால் பாதிக்கப்படுவார்கள். ஆடம்பரச் செலவினங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கடகம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படும்.

சிங்கம்: தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக் கொள்வீர்கள்.

கன்னி: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும் எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகித வழியால மனக்கவலை தோன்றக் கூடும். மனத்திடம் வேண்டும்.

துலாம்: எல்லாத்துறையிலும அபிவிருத்தி காணப்படும். மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புண்டு. நண்பர்களின் உதவியும் அவசியம் கிடைக்கும்.

விருச்சிகம்: நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும். புதுய முயறசிகள் கைகூடும். தொழில் திறமையிலும் முதலிடம் பெறுவீர்.

தனுசு: எதிலும் முன்னெச்சரிகையுடன் நடந்து கொள்ளவும். உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு திரை மறைவில் சதிகள் நடைபெறும். அவதானம் நன்று.

மகரம்: குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும். பொருள் வரவில் திருப்தியும் உண்டு.

கும்பம்; எதிலும் சோர்வு தென்படும். ஆதரவு காட்டியவரே உங்களை அலட்சியபடுத்துவதற்கு முனைவார்கள். நண்பர்களின் தொல்லைகளால் பண நெருக்கடி தோன்றக் கூடும்.

மீனம்: புதிய இடங்களில் இருந்து உங்களுக்கு ஆதரவு வளரும், எதிர்பார்த்தவர்களே உங்கள் நண்பர்களாவார்கள் பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

திருமலை ரவீந்திரன்

## அரசின் திட்டங்கள்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பிரதிநிதிகள் குழு திரு ஜெயவர்த்தனவை வலியுறுத்தியது. இச் சந்திப்பின் பின் திரு. கருணரட்ண உரையாற்றுகையில், சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாக்கப்படும் என்று தம் குழுவிடம் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகக் கூறினர்.

## விளையாட்டு போட்டி

பூநகரி செவ்.

பூநகரிக் கொத்தணி விளையாட்டுப் போட்டிகள் பூநகரி மகாவித்தியாலய மைதானத்தில் கொத்தணிஅதிபர் திரு கு. சிவகுமாரன் தலைமையில் நடைபெறறது.


பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடனடியாக எம் முகவர் கூட்டிச் செல்வார்.

உடன் தொடர்பு கொள்ளவும்:

GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோயில் முன்பாக)

(A 778)

நெஸ்பிறே பருகி வெற்றியீட்டுங்கள்!

ஒவ்வொரு பக்கெட்டிலும் அன்பளிப்பு... புலமைப்பரிசில் வெல்வதற்கான வாய்ப்பு.




நெஸ்பிறே அருந்துவோரே!

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நெஸ்பிறே, உடன் நெஸ்பிறே பக்கெட்டிலும் உங்களுக்கு இலவச அன்பளிப்பு. அத்துடன், ரூ. 10,000 பெறுமதியான புலமைப்பரிசில் ஒன்றை வெல்லும் அதிஷ்டம் உங்களுக்குக் கிடைக்கலாம்.



இலவச அன்பளிப்புகள்

விசேட ஊக்குவிப்பு விளம்பரத்தை முகப்பில் கொண்ட ஒவ்வொரு நெஸ்பிறே பக்கெட்டினுள்ளும் பின்வரும் இலவச அன்பளிப்புகளில் ஒன்று இருக்கும்: நான்கு அற்புதமான குறிப்பேடுகள் இரண்டு சிறந்த நிறப் பேனுக்கள்.

நெஸ்பிறே புலமைப்பரிசில்கள்

ஒவ்வொரு நெஸ்பிறே குறிப்பேட்டின் பின் அட்டை இடதுபக்க அடி மூலையிலும் 1,2,3, அல்லது 4 என்று இலக்கமிடப்பட்ட, கிழித்தெடுக்கக்கூடிய அடையாளத் துண்டுகள் உள்ளன. இவை நான்கையுமே சேகரித்து, உங்கள் பெயர், முகவரியை எழுதி, கூப்பனில் காணப்படும் வாக்கியத்தையும் பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

நெஸ்பிறே புலமைப்பரிசில் போட்டி
த.பெ.எண் 189, கொழும்பு.

விதிகள்.

(அ) ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனல், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 1, 2, 3, 4 ஆகிய நான்கு இலக்க அடையாளத் துண்டுகளும் இணைக்கப்பட வேண்டும்.
(ஆ) விண்ணப்பங்கள் தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
(இ) போட்டி 1986 ஓகஸ்ட் 15 வரை நடைபெறும். ஆகவே, விண்ணப்பங்கள் அத்திகதியில் அல்லது அதற்கு முன்பு எமக்குக் கிடைக்க வேண்டிய.
(ஈ) வெற்றியீட்டும் 5 பேரைத் தெரிவுசெய்வதற்கான சீட்டிழுப்பு 1986 ஓகஸ்ட் 18 நடத்தப்பட்டு, முடிவுகள் இந்தப் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.
(உ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எவ்வித கடிதத் தொடர்புக்கும் இடமில்லை.
(ஊ) நெஸ்லே நிறுவனம், நியமிக்கப்பட்ட நெஸ்பிறே விற்பனை நிலையங்கள், தொமஸன் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கையில் வாழும் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

கூப்பன்:
பெயர்: ______
முகவரி: ______
______
நெஸ்பிறே-வளரும் ______

வெல்லுங்கள்! ஒவ்வொன்றும் ரூ 10,000/- கொண்ட 5 புலமைப் பரிசில்கள்




நெஸ்பிறே-வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

JWT NL 1956 Licence No S 522

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 9-7-86

'மாகாணசபைகளால்
# ஒரு குறைந்தபட்ச தீர்வை சாத்தியமாக்க முடியும்!'
## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) கருத்து

''இனப்பிரச்னையின் தீர்வுக்கான பாதையில் அரசு முன்வைத்துள்ள மாகாணசபை யோசனைகள் ஓர் ஆரம்ப அடிப்படைப் புள்ளிகளாகவே இருப்பினும் இவற்றை அடிப்படையாகக் கொண்டு விரிவானதும், தெரிவானதுமான பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் பொறுப்புடனும் நிதானத்துடனும் ஈடுபட்டால் இனப்பிரச்னைக்கு குறைந்தபட்சம் தீர்வை சாத்தியமாக்கமுடியும் என்றே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி [இடது] கருதுகின்றது. அதே வேளை அரசியல் கட்சிகளின் அடுத்த மாநாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும தமிழர் விடுதலைக்கூட்டணியும, சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தவறாது பங்குகொள்வதன் அவசியத்தை எமது கடசி வற்புறுத்துகின்றது. அத்துடன் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்தீவிரவாத இளைஞர் இயக்கங்களையும் பங்குகொள்ளச் செய்வதற்கான முன் நடவடிக்கைகள் துரிதபபடுத்தப்படல்வேண்டும்.''

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கடசியின் (இடது) மத்திய குழு மாகாணசபை யோசனைகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் இந்த அறிக்கையில் மேலும்தெரிவித்துளளதாவது:-

''தமிழ்மக்களுக்கு எதிரான இன அழிப்பு, நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும், நாளாந்தம் தமிழ், சிங்கள, முஸ்லிம மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் படுகொலைகள், உடமை இழப்புக்கள், இதர சேதங்களை முடிவுக்குக் கொண்டுவரும் பாதையில் மாகாணசபை யோசனைகள் ஓர் இடைக்காலத் தீர்வாக அமையுமானல் அதை எமது கட்சி யனபபூர்வமாக வரவேற்கும்.

''தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் படிப்படியாக இல்லாமல் செய்யும் உள்நோக்குடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்தும் செயல்படுத்துவதற்கு வகை செய்யும் யோசனைகள் இருப்பின் அவைகைவிடப்படல் வேண்டும். அதேபோல் திருகோணமலைத்துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதைச் சாதகமாகக் கொண்டு அதன் சுற்றுடலில் எவ்விதமான திட்டமிட்ட குடியேற்றத்திற்கும் இடமளிக்கக்கூடாது.

''அரசு தான் முன்வைத்துள்ள மாகாணசபை யோசனைகளை பயனுள்ள பேச்சுவார்த்தையாக முன்னெடுக்கவும், அவற்றின் அடிப்படையில் ஒரு குறைந்தபட்ச அரசியல் தீர்வைக்காண முன்வருமானல் அதற்கு முன்னேடியாக எமது கட்சி ஏற்கனவே வலியுறுத்தி வந்த அரசியல் அமைப்பின் 6 வது திருத்தத்தை வாபஸ் பெறுவதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஐந்தாம் பிரிவையும் நீக்கவேண்டும். அத்துடன் உறுதியான ஒரு யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கும் முன்வருவது அவசியமாகும்''

---

### மாங்கேணி தாக்குதல்:
## மூன்று முகாம்களுக்கு பொறுப்பான அதிகாரி பலி
### –புலிகள் அறிக்கை

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதலையும், பொலிஸ் நிலைய வாகனங்கள் மீதான கண்ணிவெடித் தாக்குதலையும் உரிமைகோரி தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''மாங்கேணி முகாம் தாக்குதலின்போது நாம்முகாமினுட் புகுந்து தகர்த்த கட்டிடங்களிடையே சிக்கி கொல்லப்பட்டவர்களுள் கேர்ணல் மல்பாவாவும் ஒருவராவர். இவ்வதிகாரி 3 ராணுவ முகாம்களுக்கு பொறுப்பானவர் ஆவார்.

**''கிறனேட்'' வீச்சு**

''மாங்கேணி முகாம் தாக்குதலின்போது வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இருந்து கமாண்டோக்கள் வாகனங்களில் இம்முகாமினருக்கு உதவியாக புறப்பட்ட சமயம் எமது வீரர்கள் கிறனேட் வீசியதில் கமாண்டோக்கள் தரப்பில் உயிர்ச்சேதமும் காயங்களும் ஏற்பட்டன.

**கண்ணிவெடி**

''மாங்கேணி இராணுவ முகாமை தாக்குவதற்காக எம்மால் காயங்கேணி பாலம்தகர்க்கப்பட்டது. இதனுல் இவ் முகாமினருக்கு வேறு முகாம்களில் இருந்து தரை வழியாக உதவிகள் கிட்டுவதில் தடை ஏற்பட்டது. தகர்க்கப்பட்ட பாலத்தினை சீர்செய்வதற்காக நேற்று முன்தினம் பொலிஸ் கமாண்டோக்கள் பாலத்தில் நின்று வேலை செய்து கொண்டிருந்த போது ஏற்கனவே எம்மால் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் வெடித்தபோது பெருமளவு கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் பலர் பலத்த காயங்களுக்குஉள்ளாக்கப்பட்டனர். (மா)

---

டச்சு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உதவியாளர் பலத்த காயமுற்ருர்.

இதனைத் தொடர்ந்து வண ஓம்லோ ஜீப்வண்டியைநிறுத்தி அதிலிருந்தும் கீழே இறங்கி தமது சிலுவையை மேலே தூக்கிப்பிடித்தும், கரங்களை உயர்த்தியும் சுடுவதை நிறுத்தும்படி சைகை செய்துள்ளார்.

ஆயினும் அந்த ஹெலிகாப்டர் அதன் துப்பாக்கிப்பிரயோகத்தை நிறுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. உதவியாளரான பிரான்ஸிஸ் சேவியரும் கைகளைத் தூக்கி சைகை செய்யவே அவர் மீது வயிறு, கை, கால் ஆகிய இடங்களில் சூடுகள் விழுந்தன. தொடர்ந்து அவர் மயக்கமுற்று வீழ்ந்தார்.

இதனையடுத்து ஹெலிகாப்டர் அவ்விடத்தை விட்டு நகர்ந்ததும் வண. ஓம்லோ அயலவர்களின் உதவியுடன் தமது உதவியாளரை பூநகரியூடாக யாழ் ஆஸ்டத்திரியில் சேர்ப்பித்தார்.

வண ஓம்லோ 65 வயதான ஒல்லாந்து நாட்டுக்காரராவார். இவர்கடந்த 38 வருடங்களாக இலங்கையில் மதப் பணிபுரிந்துவருகிருர். இருவருடங்களுக்கு முன்னர்கொழும்பிலிருந்து வடபகுதிவருவதற்கும் பாதுகாப்புப் படையினரால் இவருக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய சம்பவத்தில் சேதமான வண. ஓம்லோயின் பச்சைநிற ஜீப் வண்டியில் 'செஞ்சிலுவை' அடையாளம் பொறிக்கப்பட்டிருந்த தென்றும் தெரிவிக்கப்படடது. [ஐ]

---

பாலைதீவு---

(1ம பக்கத் தொடர்ச்சி)

மேற்படி படகு அதிகவேகத்தில் சென்றமையே விபத்துக்கு முக்கிய காரணம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்படகு கடலில் கவிழ்ந்ததைத் தொடர்ந்து இதிலிருந்த சிலர் நீந்திச்சென்று வேருெரு படகின் துணையுடன் தமது ஏனையசகாக்களைக் காப்பாற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

---

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் புதன்

ஆறும் ஆண்டு வகுப்பு (5-ந் தரம்) மாணவர்க்கான புலமைப் பரிசில் பரீட்சை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது இப்பரீட்சை ஆகஸ்ட் மாதம் 10-ந்திகதி நடைபெறும்.

இம்மாதம் 3-ந் திகதி இப் பரீட்சை நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## தமிழ்த்தின விழாப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்.

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தின விழாப் போட்டிகள் இன்றும் நாளை 10ம் திகதியும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெறும் இத்தமிழ்த் தினவிழாப் போட்டிகளுக்கு அமைப்புக் செயலாளராக கல்வி மூளவள நிலையப் பொறுப்பதிகாரி திரு சி. எஸ். சிதம்பரநாதன் கடமையாறுகிருர். (மா)

---

## கொள்ளை

ஊர்காவற்றுறை செவ்வாய்

ஊர்காவற்றுறையில் உள்ள வசந்தா ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் பல ஆயிரக்கணக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் கடந்த சனி இரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126;

---

பேராதனை வளாக
## இறுதியாண்டு விஞ்ஞானபீட பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இறுதியாண்டு விஞ்ஞானபீட மாணவர்களின் பெறுபேறு விபரம் வருமாறு:

பௌதீக விஞ்ஞானம் முதலாம் பிரிவு; எஸ். சிவானந்தராஜா.

இரண்டாம் பிரிவு [மேல் வகுப்பு]: செல்வி எஸ். சிவசுப்பிரமணியம், [கீழ் பிரிவு] செல்வி யு எச். கி. இராணி, செல்வி எஸ். கென்ஸ்மான், செல்வி எஸ். எஸ். இந்திராணி.

சாதாரண சித்தி: செல்விகள் எம் கே. கமலத், யு. ஜி எ. பதமகுமாரி, எம். ஐ. டசிலியா, ஆர். கௌரி, எஸ். சாந்தாதேவி, ஆர் பாலசிங்கம், பி. எஸ். பெனடிக்ற், எஸ் சுமதி, ஆர். கருணனந்தன், ஈ. யு. எம். பிரேமகுமாரி, கே, கமலரதி, பி. சிவசிதம்பரம்,

திருவாளர்கள். எஸ். சதிர்காமநாதன், எம். எஸ் நவ்ஷாக் ஏ. ஆர். மொகமட் நிஸ்தார், ஏ. மொகமட் கலீல், ஜெ. ஏ. எச். சேனுதிபதி' எம். காதர், எஸ் சிவகுமாரன், எஸ். கணேசலிங்கம், கே. கே. மன்ரஞ்சன், ஏ சற்குணராஜா, ஏ. ராஜ்ரஞ்சித், எம். பி. எம். பைஸ். கே. விக்கினேஸ்வரன்.

உயிரியல் விஞ்ஞானம் சிறப்பு:- முதலாம் பிரிவு: செல்வி எஸ். பாலச்சந்திரன். இரண்டாம் பிரிவு (மேல்வகுப்பு): செல்வன் எஸ். தயானந்தன், செல்வி கே. சத்தியபாமா.

இரண்டாம் பிரிவு [கீழ்வகுப்பு. செல்விகள் கே. எஸ். சுகந்தினி, ரி. வாசுகி சி. சத்தியகலா, திருவாளர்கள்: ஜி. ஆர். எஸ் கே. கமலத், என. நந்தகுமார்.

சாதாரணசித்தி: செல்வன் ரி. பாலகிருஷ்ணன், செல்வி யு. ஏ. ரோகினி. [சிவ]

---

## பஸ் நிலையத்தில் கைப்பை அபேஸ்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படவிருந்த பஸ்ஸில் ஏறுவதற்காக நின்ற ஒரு தம்பதிகளிடமிருந்து அவர்களின் கைப்பையை இனந்தெரியாத நபர் ஒருவர் பறித்துச் சென்றுள்ளார்.

இப்பையினுள் எழுநூறு ரூபா பணமும, இவர்கள் இருவரினதும் அடையாள அட்டைகளும் வேறு பெறுமதியான சில பொருட்களும் இருந்தன என்று தெரிவிக்கப்படடது.

பையைப்பறித்துக்கொண்டு போன நபர் சனக்கூட்டத்தினுள் மாயமாக மறைந்து விட்டாராம். அடையாள அட்டையை பறிகொடுத்ததினுல் அத்தம்பதியினர்தமதுகொழும்புப் பயணத்தை நிறுத்திக் கொண்டனர். புங்குடுதீவைச் சேர்ந்த சதாசிவம் சிவகுமார் தம்பதிக்கே இக்கதி ஏற்பட்டது. [ஐ]

---

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை கதிரவேற்பிள்ளை

சுதுமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு தம்பிப்பிள்ளை (ஓய்வுபெற்ற மாவட்ட பாடசாலை பரிசோதகர்) இராசம்மா தம்பதிகளின் அன்பு மகன் தம்பிப்பிள்ளை சதிரவேற்பிள்ளை (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி சிறுப்பர்) காலமானுர். அன்னுர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சுகன்யா, சுகுமார், (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருந்தவநாதன் (இலங்கை மத்திய வங்கி), பிறேட்றிக்கா (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனுரும், பிரசாந்தி, பிரஜனத், சதீசன் ஆகியோரின் அன்புப் பாட்டனுரும், காலஞ்சென்ற சிவஞானம், சரஸ்வதி, திருவாதவூரன், விவேகானந்தராசா, காலிங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மணி, மகாராணி, யோகாம்பிகை, Dr. R. அரியரட்ணம், இரட்ணம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் 09-07-86 (இன்று) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு இல. 78, அரசடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

[C-3369]

### திருமதி நடராசா இரத்தினம்

கொக்குவில் மேற்கு திருமதி நடராசா இரத்தினம் 07-07-86ல் காலமானுர். இவர் தம்பு நடராசாவின் அன்பு மனைவியும், இராசலக்ஷ்மி (ஆசிரியை. கொக்குவில் இந்துக் கல்லூரி), இராசேஸ்வரன் (தொலைத் தொடர்பு பரிசோதகர், அபுடாபி), இராசதேவி, இராசகுலசிங்கம் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), இராசகுலேந்திரன் (தொலைத் தொடர்பு பரிசோதகர், கொழும்பு), இராசகுமார் ஆகியோரின் தாயாரும், நடராசா (ஆசிரியர், உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை) அவர்களின் சகோதரியும், அழகரட்ணம் (பொறியியலாளர், R. D. A. அநுராதபுரம்), கமலாவதிதேவி, செல்வநாயகம் (ஜேர்மனி) சுகிர்தா, ரசிக்கா ஆகியோரின் மாமியாரும், யோகாம்பாளின் மைத்துனியும், விஞேதினி, விஜிதன், ஞானவதி, சுதர்சினி, பிரகாஷ், கார்த்தீபன் ஆகியோரின் பாட்டியும் ஆவார் தகனக்கிரியைகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

[C-3387]